1974 மார்ச் 7]

(முற்பகல் 9-30)

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, கருச்சிதைவு செய்வது கொடிய பாவம் என்று சில மதவாதிகள் கூறுகிறார்கள். அரசின் கருத்துக்கு மாறுபட்ட, அவர்கள் கருத்தைப்பற்றி அரசு என்ன கருதுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, முறையான வாழ்க்கை நடத்தி, கணவன் மனைவி உறவில் கேடு இல்லாமல் இருந்து, பிறக்கின்ற குழந்தையினால் உடல்நலம் கெடும், குடும்பம் கெட்டுவிடும் என்று யாராவது வேண்டுமென்றே அந்த குழந்தையின் கருவை சிதைக்கத் தூண்டுவார்களேயானால் அது பாவம் தான். பெற்ற பிள்ளையை வளர்க்க முடியாது, தாய்க்கு உடல்நலம் கெடும் அல்லது பைத்தியம் பிடிக்கும் நிலை ஏற்பட்டு, தகப்பன் பிச்சைக்காரன் ஆகின்ற நிலை ஏற்படும் என்று தெரிந்து கருச்சிதைவு செய்வதானால் அது புண்ணியமாகும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், இந்த 'சக்ஷன் பம்ப் இன்செர்ஷன்' நம்முடைய அரசாங்க மருத்துவ மனைகளில் எத்தனை இடங்களில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்ட எல்லா மருத்துவ மனைகளிலும் இருக்கிறது ; இந்த முறை தான் கையாளப்படுகிறது.

விஷக்குடிக்கு மருத்துவம்

*318 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசினர் மருத்துவ மனையில், விஷம் குடித்தவர்களைக் காக்கும் கருவி ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.